**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 29.10.2024**

| | |
|---|---|
| **Name : நந்தினி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சித்தர் கோயிலில் குடியிருந்து தற்போது எம்.எஸ்.சி பட்டப்படிப்பு படித்து வருகிறேன். அ.சா.5 எனது உடன்பிறந்து சகோதரர் ஆவார். விபத்தில் இறந்துபோனது எனது அத்தை ஆகும். கடந்த 09.08.2023 ம் தேதி மாலை 3.30 மணிக்குள் புக்கம்பட்டில் உள்ள பொன்னி என்பவரது வீட்டிற்கு கறி விருந்திர்காக செல்லும்போது, நான் எனது மாமா கதிரேசன் என்பவருடன் Scooty இருசக்கர வாகனத்தில் சென்ற சமயத்தில், எனது தம்பி சுரேஷ்குமார் மற்றும் எனது அத்தை வளர்மதி இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்றார்கள்.

2. எனது அத்தை மற்றும் தம்பி இருவரும் எங்களுக்கு முன்பாக இருசக்கர வாகனத்தில் ஓமலூரில் இருந்து மேச்சேரி செல்லும் சாலையில், சந்தரமாகடை அருகில் புக்கம்பட்டி செல்லும் பிரிவு சாலை செல்வதற்காக சென்ற சமயத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றபோது, மேச்சேரியில் இருந்து ஓமலூர் நோக்கி வந்த இனோவா கார் வேகமாக ஓட்டி வந்து எனது தம்பி ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

3. பின்னர் விபத்தின் காரணமாக எனது தம்பிக்கு தலை, தோள்பட்டை இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டது. எனது அத்தைக்கு தலையில் மற்றும் காலில்

காயம் ஏற்பட்டு இருவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தபோது எனது அத்தை மருத்துவமனையில் இறந்துவிட்டார். எனது தம்பி சேலம் அம்மணி மருத்துவமனையில் கொண்டு சென்று உள்நோயாளியாக 5 நாட்கள் சேர்க்கப்பட்டார்.

4. இந்த விபத்திற்கு இனோவா கார் ஓட்டுனர் தான் காரணம் ஆகும். பதற்றம் காரணமாக விபத்து ஏற்பட்டவுடன் விபத்தில் அடிப்பட்டவர்களை பார்த்ததால் கார் ஓட்டுனரை பார்க்க இயலவில்லை. நாங்கள் கண்ணுக்கு தெரியும் தூரத்தில் பயணம் செய்யும் தூரத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு காரணம் கார் ஓட்டுனர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5. நான் 250 மீட்டர் தொலையில் பின்னால் வந்தபோது விபத்தை பார்த்தோம் என்றால் கண்ணுக்கு எட்டி தூரத்தில் சென்றோம். சம்பவ இடம் நடந்த இடம் 4 வழி சாலை என்றால் ஆமாம். நான்கு சாலை நடுவே தடுப்பு உள்ளது என்றால் ஆமாம். நடுவே உள்ள தடுப்பின் உயரம் 5 அடி இருக்கும் என்றால் ஆமாம். 250 மீட்டர் தொலைவில் பயணம் செய்த சமயத்தில் வளைவில் எனது தம்பி முன்னால் சென்றபோது நடந்து விபத்தை பார்க்க வாய்ப்பில்லை என்றால் பார்த்தேன்.

6. எங்கள் வாகனம் இயக்கப்படும் நிலையில் சென்றபோது விபத்தை பார்த்தோம் என்றால் ஆமாம். 250 மீட்டர் தொலைவில் பயணம் செய்த சமயத்தில் வாகனத்தை இயக்கும்போது பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல பார்த்தேன். நாங்கள் அருகில் சென்று பார்த்தபோது எனது தம்பி மற்றும் அத்தை கீழே விழுந்து கிடந்தார்கள் என்றால் ஆமாம். சத்தம் கேட்ட பிறகு தான் அவசரமாக போய் பார்த்தோம் என்றால் ஆமாம் ஆனால் நேரில் பார்த்தோம்.

7. எனது தம்பி தனது சாட்சியத்தில் 40 கி.மீ வேகத்தில் சென்றதாக சொல்லும்போது என்னால் விபத்தை நேரடியாக பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட உடன் எவ்வளவு நேரம் கழித்து ஆம்புலன்ஸ் வந்தது

என்றால் 5 நிமிடத்திற்குள் வந்தது. ஆம்புலன்சில் நானும் எனது அத்தையுடன் செல்லவில்லை என்றால் ஆமாம். என்னை எனது புக்கம்பட்டியில் உள்ள அத்தை வீட்டிற்கு அழைத்து சென்று விட்டார்கள்.

8. எனது தம்பியை மருத்துவமனையில் சேர்ந்தது பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். எனது மாமாவுடன் பின்னால் அமர்ந்து சென்ற நிலையில் தடுப்பு நடுவே இருந்தபோது என்னால் விபத்தை நேரடியாக பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது தம்பியையை காப்பாற்றவும், இறந்த எனது அத்தை வளர்மதிக்கு விபத்து நஷ்ட ஈடு கிடைக்கவேண்டி இதர நபர்கள் கூறியதன்பேரில் போலீசாரிடம் பொய்யான தகவலை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**